## கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் தகவல்கள், ஆராய்ச்சி (தனி) கம்பனி - 2017

கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் தகவல்கள் ஆராய்ச்சி (தனியார்) கம்பனியின் 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான கலைப்பு கணக்கு கூற்றுக்கள் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான கலைப்பு நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் சர்வதேசஇலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 உருவாக்கமும் கம்பனியின் உரித்தும்

2009 சனவரி 07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கப்பல் இடவசதிகளை ஒதுக்கும் பணியகத்திற்குப் பதிலாக கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல்கள் ஆராய்ச்சி நிறுவகம் என புதிய நிறுவனமொன்று தாபிக்கப்பட்டது. அவ்வாறே நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புக்களின் அடிப்படையில் பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் அதிகார சபையொன்றாக தாபிப்படும் வரை துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழ் அரசிற்கு சொந்தமான கம்பனியொன்றாக நடாத்திச் செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2009 யூலை 14 ஆந் திகதி கப்பல் மற்றும் விமான சேவைகள் தகவல் ஆராய்ச்சி (தனியார்) கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கை கப்பல் இடவசதிகளை ஒதுக்கீட்டு பணியகம் கலைக்கப்பட்டு அதற்கு உரிந்தாக இருந்த ரூபா 30 மில்லியனான நிலையான வைப்புக்கள் உட்பட சகல சொத்துக்களும் இக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 30 மில்லியனான பங்கு மூலதனத்தின் உரித்து பொதுத் திறைசேரியின் வசம் காணப்பட்டது.

## 1.5 கம்பனியை கலைத்தல்

கம்பனி 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்தமை கம்பனி தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றத் தவறியிருந்தமை, விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பினை வழங்காமை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டு துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கருத்திற் கொண்டு 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அமைச்சரவையால் கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கம்பனியின் சொத்துக்களை விற்பனை செய்தல், பொறுப்புக்களை தீர்வு செய்தல் மற்றும் ஊழியர்களுக்கு இழப்பீட்டை செலுத்துதல் போன்றவற்றின் பின்னர் எஞ்சிய ரூபா 21,103,779 தொகையை 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட கலைப்பதற்கான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர நிதிக்கூற்றுக்களானவை கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் தகவல் ஆராய்ச்சி (தனியார்) கம்பனியின் 2017 ஆகஸ்ட் 02 இல் உள்ளவாறான கலைப்புக் கணக்குகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க கலைப்பு நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் மீளாய்வு காலப்பகுதியின் நட்டம் ரூபா 2,215,076 ஆக இருந்தது. கம்பனி செயற்படுத்தப்படாமல் நடாத்திச் சென்றமை காரணமாக கலைப்பு திகதியில் உள்ளவாறு திரண்டு காணப்பட்ட நட்டம் ரூபா 8.89 மில்லியனாக இருந்ததுடன் அது வெளியிடப்பட்ட மூலதனமான ரூபா 30 மில்லியனுடன் சீராக்கப்பட்டதன் பின்னர் ரூபா 21.10 மில்லியன் வரை 29.63 சதவீதத்தினால் வெளியிடப்பட்ட மூலதனத்தில் குறைவு இடம்பெற்றிருந்தது.